யாழ்ப்பாண பொது நூலகம்

# மேற்கு ஐரோப்பாவில் நெருக்கடி நிலையில் ஈழத் தமிழர்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 21 இதழ் 358
யாழ்ப்பாணம் புதன்கிழமை 03 – 02 – 1993

(லண்டன்)
மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஈழத்தமிழ் அகதிகள் நாடு திரும்பவேண்டிய நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தநிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் ஈழத்தமிழர்கள் பெருமளவில் ஐரோப்பிய நாடுகளுக்குப் படையெடுப்பது அதிகரித்ததனையடுத்தே இந்த நிலை உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும் இங்கிருந்து செல்வோர் ஆட்கடத்தல், போதை வஸ்துக்கடத்தல் உட்பட பல சமூக விரோத செய...

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் படையினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டன

(வவுனியா)
வவுனியா – மேற்குப் பகுதியில் பாரிய ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுவரும் படையினரை எதிர்த்துப் புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் படையினர் தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது புலிகள் நடத்தும் எதிர்த் தாக்குதலினால் பல படையினர் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி புலிகளின் குரல் தெரிவித்தது.

இதேவேளை வவுனியா மேற்கு பகுதியில் தமது படை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

# மாதகலில் நேற்று புலிகள் அதிரடி;

# உயர் அதிகாரி உட்பட 10 ராணுவம் பலி

## படையினரின் 5 சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
மாதகல் பகுதியில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஸ்ரீலங்காப்படையின் உயர் அதிகாரி ஒருவர் உட்பட பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். ஐந்து இராணுவத்தினரின் சடலங்களும் பல ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மாதகல் கடற்கரை வீதி வழியே நேற்றுக் காலை 6-50 மணியளவில் வீதித்தடைகளை அகற்ற வந்த முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர். விடுதலைப்புலிகளின் தாக்குதலில் நிலைகுலைந்த படையினர் ஐந்து சடலங்களையும், ஆயுதங்களையும் கைவிட்டு காயங்...

(4ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)
மாதகலில் நேற்று புலிகள் நடத்திய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:

★ ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கிகள் – 2
★ ரி 56 ரக துப்பாக்கிகள் – 6.
★ ரி 81 ரக துப்பாக்கிகள் – 2
★ ஏ கே. இலகு இயந்திர துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் – 2

4-ம் பக்கம் பார்க்க

## இன்று குமண வருகிறது

(யாழ்ப்பாணம்
220 தபால் பொதிகளுடன் குமண கப்பல் இன்று மாலை காங்கேசன்துறைக்கு வருகின்றது.

இக்கப்பலில் ப. நோ. கூ. சங்கங்களுக்குப் பெருந் தொகையான உணவுப் பொருள்கள் வருவதுடன் யாழ். மாநகர சபைக்குத் தேவையான சில பொருள்களும் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வி)

## பொல்காவலையில் ரயில் தடம் புரண்டது

(கொழும்பு
வவுனியாவிலிருந்து நேற்று முன்தினம் காலை கொழும்பு நோக்கி புறப்பட்ட காலை

## கண்ணிவெடியில் சிக்கி இரு சிப்பாய்கள் காயம்

(வவுனியா)
வவுனியா கொக்குவெளிப் பகுதியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கி இருபடையினர் படுகாயமடைந்துள்ளனர்

நேற்று செவ்வாய்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவெளிப் பகுதியில் உள்ள இராணுவக் காவலரண்களுக்கு இடையில், இக்கண்ணிவெடி புதைத்து வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## பலவந்தமாக தமிழர்க்கு தேசியக்கொடி விற்பனை

(மட்டக்களப்பு
மட்டு. நகரில் இராணுவம் மற்றும் பொலிஸ் சோதனை நிலையங்களில் வைத்து தமிழ் மக்களுக்குப் பலவந்தமாக, சிறிலங்கா தேசியக் கொடிகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சோதனை நிலையங்களுக்குப் பலவந்தமாக கூட்டிச் செல்லப்படும் பொதுமக்களை மிரட்டி, இந்தத் தேசியக் கொடிகளை படையினர் விற்பனை செய்து வருகின்றனராம். (ரி)

# ஆறு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
மாதகலில் நேற்று இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கப்டன் செழியன் அல்லது பாரதி (செபஸ்தியாம்பிள்ளை மனோகரன் மன்னார்), லெப். நெடுமாறன் அல்லது சாந்தன் (வேலாயுதம் பிரேம்குமார், திருமலை), லெப். மதனழகன் அல்லது காளிதாஸ் (மணி ராசா லோகிதராசா [தம்புலுவில், அம்மாறை), லெப். இறைஞன் அல்லது சுலக்சன் (அன்ரனி கணேஷ் ஆரையம்

(4-ம் பக்கம் பார்க்க)

# படையினர் கடும் ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)
மாதகல் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதலின் போது படையினர் காலை ஏழு மணிமுதல் சரமாரியாக ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்நேரத்தில் இரு தரப்பினதும் சூட்டுச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டவண்ணமிருந்தன.

இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் குண்டுகள், திருவடிநிலை, பொன்னாலை, மூளாய் கரையோரப் பகுதிகளிலும் சுழிபுரம், பனிப்புலம், சித்லாலை வயல் வெளிகளிலும் விழுந்து வெடித்தன. (139)

# போக்குவரத்துத் தடையால் கடமைக்கு செல்லமுடியாது

## அரச ஊழியர் அவதி

(யாழ்ப்பாணம்)
கிளாலிப் படகுச்சேவை தடைப்பட்டதனால் பெரும் தொகையான அரச ஊழியர்கள் தத்தமது கடமைகளுக்கு செல்ல முடியாத நிலையில் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு பிற தேவைகளுக்காக வந்த அரச ஊழியர்களும் மற்றும் கொழும்பிலிருந்து வந்து பூநகரி - நல்லூர்ப் பகுதிகளில் தடைப்பட்டு நிற்கும் பல உத்தியோகத்தர்களும் கொழும்பு செல்ல முடியாமலும் யாழ். வரமுடியாமலும் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலங்கேணி-பூநகரி நல்லூர்ப் பகுதியிலிருந்து யாழ். வரு

(4-ம் பக்கம் பார்க்க)

# மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் இன்று 3-ம் திகதியும் 7-ம் திகதியும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமை பி.ப. 3-00 மணி தொடக்கம் 3-30 மணிவரையும் எதிர்வரும் 7-ம் திகதி ஞாயிறு மு.ப 9-30 மணிதொடக்கம் 10-00 மணி வரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ரி)

முன்தினம் காலை கொழும்பு நோக்கி புறப்பட்ட காலை ரயில் வண்டி 9-15 மணியளவில் பொல்காவலை ரயில் நிலையத்திற்கு அருகில் 'என்ஜின்' தடம் புரண்டது.

என்ஜின் தடம்புரண்டதினால் ரயில் பெட்டிகளுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை.

பி.ப 2 மணிக்கு ரயில் பாதை சீர்செய்யப்பட்டு ரயில் சேவை வழமைபோல் நடைபெற்றது. (சி)

யப்பட்டு வருவதாகத் தெரி... னராம். (ரி)

# பம்பாயில் மதக் கலவரம்

# இருவர் நேற்று பலி

(புதுடில்லி)
பம்பாயில் நேற்று மீண்டும் மதக் கலவரம் வெடித்தது. இதன்போது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

மேகம்பாதா என்ற முஸ்லீம் மக்கள் கூடுதலாக வாழும் பகுதிகளில் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதாகவும் அதனையடுத்து பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர் எனவும் கூறப்படுகிறது.

சிவசேனையைச் சேர்ந்த தீவிரவாதிகளே இத்தகைய தாக்குதலில் ஈடுபட்டதாக முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் கடந்த மாதம் இடம்பெற்ற இந்து-முஸ்லிம் கலவரத்தினால் 500 பேருக்கு மேல் பலியாகியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# பலத்த பாதுகாப்பு மத்தியில் ராஜீவ் கொலை வழக்கு விசாரணை இன்று ஆரம்பம்

(புதுடில்லி)
முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கு விசாரணை இன்று பூந்தமல்லி துணைச் சிறைச்சாலையில் ஆரம்பமாகிறது.

ராஜீவ்காந்தி கொலையுண்ட 20 மாதங்களுக்குப் பிறகு இன்று இவ்வழக்கு விசாரணை ஆரம்பமாகிறது. மத்திய புலன் விசாரணைக்குழு இவ்வழக்கு விசாரணை தொடர்பான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

70 லட்சம் ரூபா செலவில் இச்சிறைச்சாலை பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அருகாமையில் உள்ள நீதிமன்றம் 23 லட்சம் ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சிறைச்சாலையைச் சுற்றியுள்ள பகுதி முழுவதும் தடை

(4-ம் பக்கம் பார்க்க)

# பாக்கிடமிருந்து 9 போர்க் கப்பல்களை அமெ. திரும்பப் பெறும்

(நியூயோர்க்)
பாகிஸ்தானுக்குக் குத்தகைக்கு வழங்கிய 9 போர்க் கப்பல்களை மீண்டும் திரும்பப் பெற அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தான் சர்வதேச ரீதியில் பயங்கரவாதத்தை அனுசரிக்கும் ஒரு நாடு என ஜோர்ஜ்புஷ் தலைமையிலான முன்னைய அமெரிக்க நிர்வாகம் இனங்கண்டதை அடுத்து கிளின்டன் நிர்வாகம் இந்த முடிவை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. (இ-க)

## வரிவிளம்பரம்

### O/L கணிதம்

ஆண்டு 6-11 வரை கணிதத்தில் பின்னடைவான மாணவர்க்கு அடிப்படையிலிருந்து கணிதம் கற்பிக்கப்படும். திருக்கேதீஸ்வரன் Sp Trd Maths, (மணி பேக்கரி முன்பாக) பருத்தித்துறை வீதி, நல்லியமிகாடு. (சி- 7185)

### பயிற்சி

பாலர் ஆசிரியர் பயிற்சி -2-93இல் ஆரம்பமாகிறது போயா தினங்களில் நடைபெறும். O L சித்தியடைந்த மாணவிகள் விண்ணப்பிக்கலாம். விபரங்கட்கு பாலர் கல்விக் கழகம், 49/5 யாழ்வீதி, யாழ்ப்பாணம். (சி-7193)

### யாழோசையின் இசை வகுப்புகள்

வாய்ப்பாட்டு, வீணை, வயலின் ஆகிய வகுப்புகள் 06-02-93 (சனிக்கிழமை) தைப்பூசமன்று காலை 9-0) மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு: யாழோசை, 61, பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி-7195)

### மணமகன் தேவை

24 வயது கத்தோலிக்க மதத்தைச்சேர்ந்த படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 2846 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (எ-2846)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள் மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள் இறுவரி விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகப் பெற்றுக் கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2829)

### பொது அறிவு

★ பாடப் புத்தகங்களைப் படித்துத் தேர்வில்



யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## மாநகர சனசமூக நிலையங்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையில் பதிவுசெய்யப்பட்ட 67 சனசமூக நிலையங்களில் இதுவரை 31 சனசமூக நிலையங்களே நடப்பாண்டுக்கான நிர்வாக சபையினைத் தெரிவுசெய்து எமக்கு அறிவித்துள்ளன.

மீதியான 36 சனசமூகநிலையங்களும் உடனடியாக நடப்பாண்டு உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்து அத்தெரிவு பற்றிய விபரங்களை எதிர்வரும் 15-02-93ம் திகதிக்கு முன்னர் எமக்கு அறியத்தந்து ஒத்துழைக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 01-02-1993. (எ-2843)


## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று தொடங்கி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். தினமும் மாலை 3 மணிக்கு விசேஷ அபிஷேகம் நடைபெற்று வைரவப் பெருமானும் பிள்ளையாரும் வெளிவீதி வருவார்கள்.

# இந்து ஆலயங்களில் சினிமா பாடல்களை தடைசெய்யக் கோரி மனு

(சென்னை)

இந்து ஆலயங்களில் சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருவது உடன் தடைசெய்யப்படவேண்டும் எனக் கோரும் மனு ஒன்று சென்னை உயர் நீதிமன்றில் அண்மையில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

அம்மனுவில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் வருமாறு:

ஆலயத்தில் நடைபெறும் உற்சவகாலங்களில் ஆண்டவன் வழிபாட்டு பாடல்களுக்கு பதிலாக சினிமாப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டுவருகின்றன. பழனி தண்டாயுதபாணி கோவிலும் இதிலடங்கும். இது பக்தர்களின் மனதை பெரிதும் புண்படுத்துவதாக உள்ளது.

எனவே ஆலயங்களில் தெய்வீகப்பாடல்களை மட்டுமே ஒலிபரப்பவோ பாடவோ அனுமதிக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி தமிழக அரசுக்கு இது குறித்து நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டார். -க


## கண்டெடுக்கப்பட்டது

காரைக்கால் மயானத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு மோதிரம் கோண்டாவில் குமரகோட்டம் சனசமூக நிலையத்தலைவரிடம் இருக்கின்றது. உரியவர்கள் அடையாளம் காட்டி வந்து பெற்றுக்கொள்ளவும்.

செ. சத்தியமூர்த்தி
தலைவர்

(எ-2845)



இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்

## திறப்புவிழாவும் "ராகபாவம்" நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: 6-2-93 முதல் 8-2-93 வரை

கலாமண்டபத் திறப்புவிழா
6-2-93 சனிக்கிழமை

### நிதியுதவி நிகழ்ச்சி

7-2-93 ஞாயிறு (முதலாம் நாள்)
மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை

5-00—6-30 நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: N. K. பத்மநாதன்,
S. S. சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன்.
தவில்: K. R. புண்ணியமூர்த்தி, T. உதயசங்கர்,
P. முருகதாஸ்

6-30—8-00 பரதநாட்டியம்:
நாட்டியக் கலைமணி செல்வன் M. அருள்மோகன்
நட்டுவாங்கம் — திருமதி சாந்தினி சிவநேசன்
(கொக்குவில் கலாபவனம்)
பாட்டு: — S. பத்மலிங்கம்
மிருதங்கம்: — S. மகேந்திரன்
வயலின்: — R. ராதாகிருஷ்ணன்

8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:
மெல்லிசைவாணர் G. சாந்தன் குழுவினர்

8-2-93 திங்கள் (இரண்டாம் நாள்)

நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: V. K. கானமூர்த்தி,
V. K. [illegible]



சகல

## பனை, தென்னை தொழில் வல்லுனர்களுக்குமான முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றில் இருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும், அந்தந்தப் பகுதி தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மேற்படி சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்று, தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். அனுமதிபெற்ற, இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால், அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக் கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக்கொள்ளும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வடமராட்சிக் கொத்தணி

01. கட்டைவேலி தெ. ப. பொ. கூ. சங்கம்
02. பருத்தித்துறை ,,
03. அச்சுவேலி ,,

அறிவிப்பாளர்
வட மாகாண
தெங்கு, பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
(எ 2832)


## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கலைப்புலவர் வீதி திருவாசக மன்றத்தில் மெய்கண்டதேவர் ஆதீன நூல் படிப்பகத் திறப்புவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு திருமுருக கண்ணப்பநாயனார் நினைவும் இடம்பெறும். மூதறிஞர் க. சி. குலரத்தினம் பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்கிறார். -சி

0 0 0

(நெல்லியடி)

புலோலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி (முதலி அம்பாள் ஆலய மணவாளக்கோல விழா இன்று மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

-160

0 0 0

(உடுவில்)

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நாட்டின் அமைதி சமாதானம் நிலவவேண்டி கும்பாபிஷேகம் ஒன்று இன்று புதன்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

(109)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாக பூஷணி அம்பாள் கோவில் நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.


# 31-ம் நாள்


## இராசி பலன்

03-02-1993
புதன்கிழமை
[illegible]

## பொது அறிவு

★ பாடப் புத்தகங்களைப் படித்துத் தேர்வில் சித்திபெறலாம் அதன் பின், உத்தியோகம் தேடும் போது உங்களின் பொது அறிவையும் அளவிடுவார்கள். அதற்கும் உங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள்!

★ பொது அறிவை வளர்ப்பதே நோக்காகக்கொண்டு மலிவு விலையில் வெளிவரும் சஞ்சிகை.

**அறிவுக் களஞ்சியம்**

8-ஆவது இதழ் விற்பனையாகிறது!

(எ-2847)

## குடும்பஸ்தர் தற்கொலை

(நெல்லியடி)

குடும்பத் தகராறில் நஞ்சருந்திய இளம் குடும்பஸ்தர் கடந்த 30ம் திகதி மந்திகை வைத்தியசாலையில் மரணமானார்.

கரணவாய் வடக்கு முத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கறுப்பன் சுப்பிரமணியம் (வயது 26) என்பவரே நஞ்சருந்தியவராவார்.

(160-இ)

8-2-93 திங்கள் (இரண்டாம் நாள்)

**நாதஸ்வர இசை:**

நாதஸ்வரம்: V. K. கானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி

தவில்: K. நித்தியானந்தன், N. கணேசன், R. S. சுதாகரன்

**இசைக்கச்சேரி:**

பொன் சுந்தரலிங்கம் — பாட்டு
R. ராதாகிருஷ்ணன் — வயலின்
S. மகேந்திரன் — மிருதங்கம்
S. துரைராஜா — கஞ்சிரா
சதா வேல்மாறன் — கடம்

**இன்னிசை வார்ப்புகள்:**

இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்

### ★ மெல்லிசை நிகழ்ச்சி ★

பாடகர்கள்: G. சாந்தன், பெவசி, வரீண ராமேஸ்வரன், பார்வதி சிவபாதம் மிதிலா விவேகானந்தன், ராதிகா சுப்பிரமணியம்

9-2-93 — 23-2-93 வரை பதினைந்து தினங்கள் "இசைவிழா" நடைபெறும்.

7-ம், 8-ம் திகதிகளில்

**நிதியுதவிக் கட்டணம்**

500/- 250/- மண்டபவாசலில் 100/-

வாழ்த்துகிறோம்

**ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,**

772, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

பொன் சுந்தரலிங்கம்
தலைவர்

(ஏ-2739)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

வேலணை
பண்டிதர், வித்துவான்
அமரர்

## வி. பொன்னுத்துரை

B. A. (Cey), B. A. (India), M. A. M. A.

(முன்னாள் அதிபர், சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம், வேலணை)

தோற்றம்: 15-09-1916

நினைவு: 04-01-1993

கற்பிக்கும் ஆசிரியர் அதிப ராகிக்
கலாநிதியாய் மும்மொழியில் பட்டம் பெற்றுப்
பற்பலநூல் மொழிபெயர்த்துத் தமிழ்த் தந்து
பாராட்டும் பரிசுகளும் விருதும் பெற்ற
வித்தகராய் விளங்குபொன்னுத் துரையாசானும்
விவேகத்தால் வேலணைக்கும் ஈழத்திற்கும்
அற்புதமாய்ப் புகழீட்டி அமர ரானார்
அவரான்ம சாந்திக்காய்ப் பிரார்த்திப் போமே

பழைய மாணவர் சங்கம்
சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி
மத்திய மகாவித்தியாலயம்
வேலணை.

(இ-7196)

## இராசி பலன்

03-02-1993
புதன்கிழமை
(தமிழுக்கு தை 21)

ஏகாதசி பி.ப. 12-53 வரை மிருகசீரிடம் மு. இ. 7-49 வரை, சித்தயோகம், இராகு காலம் நண்பகல் 12-35 முதல் 2-05 வரை, சுபநேரம் மாலை முதல் 6-35 வரை, கண்ணப்பர் குருபூசை.

மேஷம்: குடும்ப கௌரவம் தொழில் சிறப்பு, போட்டியில் வெற்றி.

இடபம்: மனக் குழப்பம், தொழில் பாதிப்பு, அலைச்சல்.

மிதுனம்: கொடுக்கல் வாங்கல் சிறப்பு, உடன்பிறந்தோர் உதவி. மதிநுட்பம்.

கடகம்: முயற்சியில் சோர்வு தொழில் பாதிப்பு, வெறுப்பு.

சிங்கம்: சயச் செலவு. பகைவர் வெறுப்பு, பண வரவு.

கன்னி: தொழில் நிரப்பந்தம், புதிய சாதனை, மன நிறைவு.

துலாம்: தொழில் நஷ்டம், விண்வம்பு, அகாலபோஜனம்.

விருச்சிகம்: பதவி மாற்றம், முன்கோபம், குடும்ப பகை.

தனுசு: வாழ்க்கை மகிழ்ச்சி நிரப்பந்தம், நண்பர் உதவி.

மகரம்: கடிந்த உறவு, மன மாற்றம், வாக்குவன்மை.

கும்பம்: கணவனுடன் முரண்பாடு, தொழில்வழி பயணம், செலவு.

மீனம்: மன உளைச்சல், குடும்ப பிரிவு, பணப் பிரச்னை.

ஜோஸ்யர்

# ஐரோப்பிய நாடுகளுக்கு சென்ற ஐவரின் கதை;

# மூச்சுத் திணறி இறந்த இலங்கையரின் பரிதாபம்

(கொழும்பு)

ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான இலங்கையர்கள் நாட்டில் நடக்கும் உள்நாட்டு போரிலிருந்து தப்புவதற்காகவும் நல்ல வேலை வாய்ப்பு தேடியும் மேற்கு நாடுகளுக்கு செல்ல அனுமதி விசாவிற்கு விண்ணப்பித்த வண்ணம் உள்ளனர். அனுமதி விசா கிடைத்தவர்களுக்கோ அதிர்ஷ்டம். அல்லாதவர்கள் பெரும் தொகையான பணத்தை செலவிடுவதுடன் ஐரோப்பிய நாடுகளில் வந்திறங்கும் வரை சொல்லொணாத் துயரங்களை அடைந்த வண்ணமுள்ளனர்.

இதுகுறித்து கொழும்பு பத்திரிகைகளில் வெளியான 'ஐரோப்பிய நாடுகளுக்கு சென்ற ஐந்து பேர்' என்ற செய்தி நெஞ்சை உருக்குவதாக அமைந்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன் ஐந்து இலங்கையர் ஆள் கடத்தும் குழுவினரால் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். குடிவரவு பரிசோதனைகளிலிருந்து தப்புவதற்காக தென்கிழக்கு ஆசியா வழியாக முன்னைய சோவியத் யூனியன், ஆஸ்திரியா மார்க்கமாக ஐந்து பேரின் பயணமும் தொடர்ந்தது.

ஆள்கடத்தல் பேர்வழிகள் ஐந்து பேரையும் காற்றுபுக முடியாத கொன்ரெயினரில் சீல் பண்ணி லொறிகளில் ஏற்றி அனுப்பியுள்ளனர்.

பெட்டியில் காற்றின்றி மூச்சுத்திணறியதால் 5 பேரும் மரண அவஸ்தையால் துடித்து திக்குமுக்காடிய களேபரத்தால் ஆள் கடத்தும் காரர்கள் பெட்டியின் மூடியை உடைத்துப் பார்க்கையில் ஐந்து பேரும் பலத்த காயங்களுடனும் முறிந்த எலும்புகளுடனும் விறைத்துப்போய் உயிரிழந்து கிடந்தனர்.

இதைக் கண்ட ஆட்கடத்தற்காரர் ஆஸ்திரியாவின் தலைநகர் வியட்னாவின் தென் பகுதியில் ஓரிடத்தில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் 'கொன்ரெயினரை' ஐந்து சடலங்களுடனும் இறக்கி விட்டு ஓடித் தப்பிவிட்டனர்.

இறந்தவர்களில் ஒருவரது டயறியில் தனது வாழ்நாளிலே தூர் அதிர்ஷ்டகரமானதும் மகா மோசமானதுமான பயணம் என குறிப்பு எழுதியுள்ளார்.

இன்னொருவரிடம் இலங்கை இத்தாலி அகராதி ஒன்று இருந்தது. இத்தாலி பயணத்திற்காக இவர் 4,300 டாலர் பெறுமதியான 2 லட்சம் ரூபா இலங்கை நாணயமாக செலுத்தி உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

ஐந்து பேரினதும் இத்தாலிய பயணம் இவ்வாறு முடிய வேண்டும். மொத்தப்பணமும் கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஏஜென்ட்டிடம் கொடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் அந்த ஏஜென்டை தேடிச்சென்றபோது அவர் அங்கிருந்து காலி பண்ணி எப்போதோ போய்ச்சேர்ந்து விட்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதே சமயம் வெளிநாடுகளுக்கு ஆட்களை கடத்தும் கும்பலால் உயிரிழந்த ஐவரில் ஒருவரின் மனைவியும் அவரது ஒரேயொரு குழந்தையினதும் படமும் கொழும்பு பத்திரிகைகளில் 'ஏமாற்றும் அழியும், என்ற தலைப்பில் கணவன் இறந்தபின் எவ்வாறு நான் வாழ்வேன் என்ற குமுறலுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரச தரப்பு பத்திரிகைகள் இச்செய்தியை வெளிநாடுகளுக்கு செல்ல ஏஜென்டுகளை நம்பியுள்ள மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக விடுத்துள்ளது.

எது எவ்வாறயினும் இக்கரைக்கு அக்கரை பச்சையாக இருக்கும் வரை வெளிநாடுகளுக்கு ஆள்கடத்தல் தொடர்ந்து நடைபெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை என பி. பி. ஸி. தெரிவித்தது. (இ)

பலஸ்தீனியர் விவகாரம்

# இஸ்ரேல் அடிபணியும் நிலையில்

# 100பேரை திருப்பியழைக்கும்

(டெல் அவிவ்)

இஸ்ரேல் நாடுகடத்திய 413 பலஸ்தீனியர்களில் 100 பேரை அடுத்தசில தினங்களில் திருப்பி அழைக்கவும் ஏனையோரின் தண்டனை பாதிக் காலமாகக் குறைக்கப்பட்டு இவ்வருட இறுதிக்குள் திருப்பி அழைக்கவும் இஸ்ரேல் இணங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு கூடிய இஸ்ரேல் அமைச்சரவையின் கூட்டத்தின்பின் பிரதமர் இட்ஷாக் ராபின் இதனை அறிவித்தார். மேலும் இவர்களுக்கு உணவு, மருந்து என்பன ஹெலிமூலம் அனுப்பவும் இஸ்ரேல் இணங்கியுள்ளது.

அமெரிக்காவுடன் கலந்தாலோசித்த பின்பே இஸ்ரேல் இம்முடிவை எடுத்தது. இஸ்ரேலின் செயலுக்கு எதிராக பொருளாதாரத்தடைவிதிப்பது குறித்து ஐ. நா. சபையில் விவாதம் நடைபெறமுன் இஸ்ரேல் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதனை வரவேற்றுள்ள அமெரிக்கா, இனி இஸ்ரேல் மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் விவாதம் ஏதும் நடைபெற்றால் தனது 'வீட்டோ அதிகாரம் மூலம் அதனைமுறியடிக்கும் எனவும் தெரிவித்துள்ளது. (சி)

# 14 படையினரும்

# கடலிலிருந்து மீட்கப்பட்டனர்

(திருமலை)

மூதூர் படகு விபத்தில் சிக்கியோரில் 42 பேர் மாத்திரமே உயிருடன் மீட்கப்பட்டனர் என கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

இவர்களில் 11 இராணுவத்தினரும் 3 பொலிஸாரும் 27 பொதுமக்களும் அடங்குவர். இறந்த நிலையில் 23 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

சுமார் 80 பேர் விபத்தில் சிக்கி உயிரிழந்ததுடன் இவர்களின் சடலங்களும் மீட்கப்படவில்லை. (சி)

# இலங்கையில் 7000

# தொழுநோயாளர் உள்ளனர்

(கொழும்பு)

உலகில் 55 லட்சம் பேர் தொழுநோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் அரைவாசிப் பேர் தான் சிகிச்சைக்காக பதிவு செய்துள்ளார்கள்.

பக்ரீரியா மூலம் இந்நோய் பரவுகிறது. 1980ம் ஆண்டளவில் அறிமுகம் செய்யப்பட்ட என். டி. ரி. சிகிச்சை மூலம் இந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றதென்றும், இதுவரை 38 லட்சம் பேர் இச்சிகிச்சை முறையால் குணமடைந்து வருகின்றார்கள். என்றும் கூறப்படுகின்றது,

2000 ஆண்டளவில் இந்த நோயை உலகில் இல்லாதொழிக்கலாம் என்றும் உலகசுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் 7000 தொழுநோயாளர்கள் உள்ளனர். 10,000 பேருக்கு 1 4 என்ற வீதத்தில்இது அமைந்துள்ளது என்றும் தெரியவருகின்றது. -சு

# தண்ணீரில் இயங்கும்

# 'சிற்றி கார்'

(பொன்)

நாளுக்குநாள் விலை அதிகரிப்புகாணும் பெற்றோலுக்குப் பதிலாக தண்ணீரைப் பாவித்து இயங்கும் புதிய காரை ஜேர்மனியைச் சேர்ந்த பொறியியலாளர் ருடிகுனர்மன் தயாரித்துள்ளார்.

பொருளாதார சிக்கனத்தோடு சுற்றுப்புற சூழலை மாசுபடுத்தாத, இந்த காரை ஓட்டுவதற்கு பத்து லீட்டர் தண்ணீருடன் சிறிதளவு கரும்பு, கோதுமையில் இருந்து பெறப்படும் ஈதைல் அல்கஹோல் ஆகியவையே எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது.

அண்மையில் பொன்நகரில் இக்காரை ஓட்டி மக்களை பெரும் வியப்பில் ஆழ்த்தியுள்ள ருடிகுனர்மன் 120 குதிரைச் சக்திகொண்ட இதன் என்ஜின் அல்கஹோலில் இருந்து காபனையும் நீரிலுள்ள ஐதரசனையும் உபயோகித்து 145 கி. மைல் வேகத்தில் செல்வதாக கூறியுள்ளார். இக்காருக்கு 'சிற்றி கார்' என பெயரிடப்பட்டுள்ளது. (எஸ்-சி)

யாழ். வந்த

# கொழும்பு பயணிகள்

# பெரும் அவதி

(திருநெல்வேலி)

கொழும்பிலிருந்து யாழ். வருவதற்காக வந்து ஆலங்கேணியில் தங்கியிருக்கும் பிரயாணிகள் பெரும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பகுதியில் தாக்குதல் நடைபெறுவதாலும் கிளாலிப் படகுசேவை இடம்பெறாமையினாலும் இவர்கள் அசௌகரியத்துடன் தங்கி நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுமுன் தினம் கிளாலிப்பகுதியில் விமானத் தாக்குதல் இடம்பெற்றதும் தெரிந்ததே. (157-சி)

# முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்

# இந்தியா வெற்றி

(கல்கத்தா)

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் கல்கத்தாவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது

டெஸ்ட் போட்டியில்கடந்த ஏழு வருடங்களின் பின்பு இந்தியா இங்கிலாந்தை வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் 2வது இனிங்ஸில் மனோஜ் பிரபாகர் 13 ஓட்டங்களுடனும் சித்து 37 ஓட்டங்களுடனும் நேற்று அடுத்தடுத்து ஆட்டமிழந்தார்கள். இதன்பின்பு துடுப்பெடுத்தாடிய ரெண்டுல்காரும், ஹம்பிரேயும் ஆட்டமிழக்காது இருந்தார்கள்.

இப்போட்டியில் சிறந்த வீரராக இந்திய அணித்தலைவர் முகமட் அஸாருதீன் தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து: 163, 258. இந்தியா: 371, 82-2. (வி-சி)

ரகசிய பொலிஸார்

# விசாரணை நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட எம். பியும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமான ஹட்சன் சமரசிங்கா வீட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கைக்குண்டு வீச்சு சம்பவம் தொடர்பான விசாரணை இரகசியப் பொலிஸார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

# இம்மாதம் நடைபெறும்

# ஆசிரியர் தர பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 10, 21ம் திகதிகளில் ஆசிரியதரப் பரீட்சைகளும், தொடர்ந்து 27, 28. மே 1 ஆகிய தினங்களில் தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4 ஆசிரியதரம் ஆகிய பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளும், நேரசூசிகளும் பெப்ரவரி மாதம் 15ம் திகதிவரையில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இம்முறை அதிகமானவர்கள் தேர்வுக்குத் தோற்றுவதனால் யாழ்ப்பாணம், மருதனார்மடம், கோப்பாய், நெல்லியடி ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. 4ம், 5ம் தரங்களுக்கான பரீட்சை நிலையம் யாழ்ப்பாணத்தில் மட்டுமே அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

திருமலை மாவட்டத்தில்

# 120 இந்துக் கோவில்கள்

# வன்செயல்களால் பாதிப்பு

(திருமலை)

அண்மைக்கால வன்செயல்களின்போது திருமலை மாவட்டத்தில் சுமார் 120 இந்துக் கோவில்கள் பெருமளவில் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் திருத்துவதற்கு தேவைப்படும் பல கோடி ரூபா பணத்தை திரட்ட திருமலை மாவட்ட இந்து ஆலய அறங்காவலர்கள், இந்து மன்றங்களின் தலைவர்கள் கூடி செயற்குழு ஒன்றினை நியமித்துள்ளனர்.

இக்குழு மூலம் திரட்டப்படும் நிதி கோவில்களின் புனரமைப்பிற்குப் பயன்படுத்தப்படும். இவர்கள் திருமலையிலுள்ள இந்துக் கொடைவள்ளல்களிடமிருந்தும் வர்த்தகப் பிரமுகர்களிடமிருந்தும் நிதி திரட்டவுள்ளனர்.

இதேபோன்ற நடவடிக்கை மட்டு, அம்பாறை மாவட்டத்திலும் இடம்பெறவுள்ளது. (இ)

# ★ "நூறு வருடங்கள் சென்றாலும் ஈழப் போரை நடத்தும் சக்தி விடுதலைப் புலிகளிடம் உண்டு"

## கொழும்பு பத்திரிகையாளர் கணிப்பு

(கொழும்பு)

நூறு வருடங்கள் சென்றாலும் ஈழப்போரை தொடர்ந்து நடத்தக்கூடிய சக்தி விடுதலைப் புலிகளிடம் உண்டு என்று கொழும்பிலுள்ள பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் அரசு சார்பு பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''இனப்பிரச்சினைக்கான தீர்வை மிக அண்மையில் காணமுடியாது. 17 வருட யுத்த அனுபவத்திற்குப் பின்பே பேரளவிலாவது சமஷ்டியை ஏற்றுக்கொள்ள தென்னிலங்கைக் கட்சிகள் தயக்கத்துடன் முன்வந்துள்ளன'' என்றும் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு-கிழக்கு இணைப்புக் கூடிய தீர்வினைச் சிங்களக் கட்சிகள் ஏற்றுக்கொள்ள இன்னும் எத்தனை வருடங்கள் செல்லும் என்பது கேள்விக் குறியாக வுள்ளது. இந்நிலையில் யுத்தத்தைத் தொடரக்கூடியதான வாய்ப்பே அதிகம் காணப்படுகிறது.

தற்போது ஆட்சியிலிருக்கும் அரசைப் பொறுத்தமட்டில் அல்லது எதிர்காலத்தில் பதவியேற்கும் அரசைப் பொறுத்தமட்டில் தொடரும் யுத்தத்தை சமாளிக்கக்கூடிய வாய்ப்பைப் பெறலாம். ஏனெனில் இனப்பிரச்சினை யார் ஆட்சிக்கு வந்தாலும் தீர்க்கமுடியாத நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

## தமிழக ஆளுநரை பதவி நீக்கம் செய்யுமாறு தி.மு.க. கோரிக்கை

(சென்னை)

தமிழக ஆளுநர் பீஷ்மர் நாராயணசிங் பதவி விலக வேண்டும். அல்லது மத்திய அரசு அவரை உடனடியாக பதவியிலிருந்து நீக்கவேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் கோரியுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ராஜீவ் காந்தி படுகொலை குறித்து விசாரணை செய்த வர்மா கமிஷனின் அறிக்கையின் பிரகாரம் பீஷ்மர் நாராயணசிங் பதவி விலக வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது. (இ-க)

## பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொலிஸ் திணைக்களத்தில் தமிழ் பொலிஸாருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மிகக்குறைந்தளவு தமிழ் பொலிஸாரே தற்போது பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் பொலிஸாரின் பற்றாக்குறையினால் இராணுவக் கட்டுப்பாடுள்ள பிரதேசங்களில் அரசினால் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் இராணுவத்தினர் வசமுள்ள பகுதிகளில் ஒருசில பொலிஸ் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும் அவை பெயரளவிலேயே இயங்கி வருகின்றன.

இந்த பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றுவதற்கு ஏற்கனவே உள்ள தமிழ் பொலிஸார்கள் பணிக்கப்பட்டிருந்தும் அவர்கள் இப்பகுதிகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்க மறுப்பு தெரிவித்துள்ளனர். (இ-ரி)

# மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லத்துரை

வேதரடைப்பு, காரைநகரைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை 14 - 01 - 1993 அன்று காரைநகரில் காலமானார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி செ. தவமணி,
மக்கள்.

(சி- 7200)

### திருமதி எஸ். வாமதேவன்

முன்னர் மேக்கண்டையில் வங்கியில் கடமையாற்றியவரும் தற்போது கொழும்பு கொமர்ஷல் வங்கி விநியோக அதிகாரியுமாகிய திரு. எஸ். வாமதேவனின் மனைவி கொழும்பில் திங்கட்கிழமை காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (03 - 02 - 93) கொழும்பில் நடைபெறும். உற்றார், உறவினர்கள் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்:
இ. வெங்கட்ராமன்,
யாழ். வர்த்தக வங்கி
முகாமையாளர்.

(ஏ-2844)

### சின்னத்தம்பி திருநாவுக்கரசு (செல்லர்)

(மலாயன் பென்சனர் பிரதம கணக்குப் பதிவாளர் கோலாலம்பூர்)

சங்கானை கிழக்கு தொட்டிலடியைச் சேர்ந்த மலாயன் பென்சனர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு 1993-02-02 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் தசமத்திதியில் சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திருமதி. தி. தையல்நாயகம் அவர்களின் பேரன்புக்கணவரும், திரு. தி. சிவதட்சணாமூர்த்தி (மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி கிளிநொச்சி, மன்னார்) அவர்களின் பாசமிகு தந்தையும் திருமதி ஆனந்தவல்லி சிவதட்சணாமூர்த்தி (இலிகிதர் பிரதேச செயலகம், சங்கானை) அவர்களின் பிரிய முள்ள மாமனாரும், செல்விகள் சி. ஹரப்பிரியா, சி.ரேணுகாதேவி, சிறிலதா, செல்வன்சி. கபிலன் (மாணவர்கள் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) ஆகியோரின் நேசமிகு பேரனும், காலஞ்சென்ற அமரர் திரு. சி. சோமசுந்தரம் அவர்கள் (அப்போதிக்கரி மலேஷியா) திரு சி. குமாரசாமி அவர்கள் (ஓய்வு பெற்ற நில அளவையாளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரனும் திரு. திருமதி கணேசநாதன், கணேஸ்வரி திரு. திருமதி குலசிங்கராசா ஆகியோரின் அன்புமாமனாரும், திரு. திருமதி சுப்பையா (ஓய்வு பெற்ற ஆசிரியர் மூளாய்) அவர்களின் அன்புச்சம்பந்தியும் ஆவார். அன்னாரின் அபரக்கிரியைகள் இன்று 1993 - 02 - 03 புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சிவாக்கினியுடன் சங்கமிப்பதற்காக இளாவெளி சைவ மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் இச்செய்தியை ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

தகவல்: தி. சிவதட்சணாமூர்த்தி
(மகன்)

சிவந்தனுவத்தை,
தொட்டிலடி,
சங்கானை கிழக்கு.
1993-02-02

(சி- 7199)

### 6 புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதி மட்டுநகர்), 2ம் லெப். மதிச்செல்வன், 2ம் லெப். தங்கவேல், (முருகேசு தனபாலசிங்கம் யாழ்ப்பாணம்) ஆகியோரே நேற்று வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி-இ)

### போக்குவரத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு எதிர்பார்த்து நிற்கும் ஆயிரக்கணக்கான பயணிகள் அங்கு உணவுக்கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுவகைகள் தேனீர், அதிகவிலைக்கு விற்கப்படுவதனாலும் பணக்கஷ்டத்தை அவர்கள் எதிர் நோக்கியிருப்பதனாலும் பலர் நகை, கைக்கடிகாரம், சைக்கிள்களை பிறரிடம் அடைவு வைத்தே உணவுத்தேவையை பூர்த்தி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-56)

### மாதகலில் நேற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் ஓடித் தப்பினர்கள். புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான இராணுவத்தினருக்கு உதவ முன்னேற முற்பட்ட மற்றுமொரு ராணுவ அணி விடுதலைப் புலிகளின் தீவிர ஷெல் தாக்குதல்களை அடுத்து இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றது.

மாதகல்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் நேற்று இடம்பெற்ற மோதலொன்றில் உயரதிகாரி உட்பட ஐந்து படையினர் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று ஊர்ஜிதம் செய்தன. (ரி-இ-139-56)

### கைப்பற்றப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

- ★ ரி 56 ரக துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் - 21
- ★ ரி 81 ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் - 6
- ★ தொடர்ரவைகள் - 550,
- ★ நடுத்தர ரவைகள் - 1759
- ★ ஜே. ஆர். கைக்குண்டுகள் - 9
- ★ தொலை தொடர்சாதனம் - 1
- ★ ரவைக்கூடுதாங்கி அணிகள் - 4
- ★ தண்ணீர்த் தாங்கிகள் - 4
- ★ ராணுவசப்பாத்துகள் - 2 சோடி.
- ★ ராணுவ பைகள் - 2

(இ - ரி 139 56)

## ஷார்ஜா கிரிக்கெட்: இலங்கை அணி பாக்கிடம் தோல்வி

(கொழும்பு)

ஷார்ஜாவில் நேற்று நடைபெற்ற 1நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்களால் இலங்கை அணியை தோற்கடித்தது.

இலங்கை அணி 46 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை நஷ்டத்துக்கு 180 ஓட்டங்களைப் பெற்றது.

அஸந்தா குருசிங்க 90 ஓட்டங்களையும் அத்துருசிங்க 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தான் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றது. (இ-க)

## யாழ். செயலக ஊழியர்க்கு பண்டிகைப் பணம் கிடைக்கிறது

(மானிப்பாய்)

இவ்வருடத்துக்கான பண்டிகை முற்பணம் பெற விண்ணப்பித்த யாழ். செயலக ஊழியர்களுக்கு 1500 ரூபா முற்பணம் வழங்கப்படுகின்றது.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்களை வாங்குவதற்கென வழங்கப்படும் விசேட வங்கி முற்பணம் ரூபா 500 பெற விண்ணப்பித்தவர்களுக்கு அதற்குரிய சுற்று நிருபம் வந்து சேராதபடியினால் இப்பணம் வழங்கப்படவில்லை. இப்பணத்தை ஜனவரி முதல் பெப்ரவரி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும். (இ-71)

### பலத்த பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 26 பேருக்கும் தனித்தனி குற்றப்பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய புலனாய்வுக் குழு தலைவர் கார்த்திகேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ் வழக்குத் தொடர்பாக சிறப்பு புலனாய்வுத்துறை 41 பேர் மீது குற்றம் சாட்டியிருந்ததாகவும் இவர்களுள் 12 பேர் தற்கொலை புரிந்து கொண்டதாகவும் இவர்களுள் சிவராசன் என்பவரும் ஒருவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வழக்கு விசாரணை இரகசியமாகவே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க

### அரிசி விநியோகம்

(மானிப்பாய்)

யாழ். கண்டி வீதியிலுள்ள வர்த்தகத்திணைக்களத்தில் 'உ' அட்டை வைத்திருப்பவர்களுக்கு 21 ரூபா 50 சத வீதம் இரண்டு கிலோ வெள்ளைப் பச்சை அரிசியும் 15 ரூபா 50 சதத்திற்கு அரை கிலோ சீனியும் தற்போது வழங்கப்படுகின்றது. (71-சி)

### மேற்கு ஐரோப்பாவில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபட்டுவருவதாகவும் இதனால் அங்கு வாழும் தமிழர்கள் பெரும்நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினை வெகுவிரைவில் தீர்க்கப்பட்டு அங்குள்ள ஈழத் தமிழர்கள் நாடு திரும்ப வேண்டுமென்பதில் அந்நாடுகள் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி?—வின்சர் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Nnmber B/10336/B